முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 15.07.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண்.09/2025**

2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 15ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அட்சயா | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | விநாயகம் | வயது | : | 39 |
| ஊர் | : | கூழமந்தல் | தொழில் | : | கூலி |

**வா.சா. 1 (அட்சயா): பிரதிவாதிகள் 1, 2 தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் செஞ்சியில் இருந்து எப்போது கூழமந்தல் ஊருக்கு வந்தேன் என்றால் 10 வருடங்கள் முன்பு வந்தேன். எனது கணவர் எங்கு வசித்து வருகிறார் என்றால் காஞ்சிபுரத்தில் வசித்து வருகிறார். 10 ஆண்டுகளாக கணவருடன் பிரிந்து வாழந்து வருகிறேன் என்றால் சரியல்ல, 6 வருடங்களாக பிரிந்து வாழந்து வருகிறேன். எனது கணவரின் சகோதரர்கள் கூழமந்தல் கிராமத்தில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது மாமனார் வீட்டை இடித்துவிட்டார்களா அல்லது இருக்கிறதா என்றால் ஆமாம். அங்குதான் நாங்கள் அனைவருகளம் ஒன்றாக வசித்து வந்தோம். எனக்கு குடும்ப அட்டை, ஆதார் கார்டு மற்ற குடும்ப உறுப்பினர்களின் அடையாள அட்டையும் மேற்படி முகவரியில்தான் உள்ளது என்றால் ஆமாம். எனது மாமனார் தற்போது எந்த வீட்டில் வசித்து வருகிறார் என்றால் வீடு இடித்த பிறகு காஞ்சிபுரம் சென்றுவிட்டார். எனது கணவர் வீட்டில்தான் எனது மாமனார் வசித்து வருகிறார். அவர் தறி வேலை செய்து வருகிறாரா என்றால் ஆமாம். எங்கு வேலை செய்கிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

2. வழக்கு போடுவதற்கு முன்பே எனது கூரை வீடை நெடுஞ்சாலைத்துறையினர் இடித்து அகற்றிவிட்டார்கள் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகும் அறிவிப்பு அனுப்பிய பிறகும் தான் சிமெண்ட் சீட் வீட்டை இடித்துவிட்டார்கள். நெடுஞ்சாலைத்துறையின் உதவிப் பொறியாளர் 19.06.2025 அன்று வீட்டை இடித்து அகற்றிவிட்டார்கள் என்றால் சரிதான். போலிசாரும், வட்டாட்சியரும் உடன் வந்தார்கள். எனக்கு மாற்று இடமாக 30க்கு 40அடி அளவில் பொதுப்பணித்துறையினர் சர்வே எண். 65ல் ஒரு வீட்டு மனை ஒப்படைவு செய்தார்கள் என்றால் இல்லை. வேறு யாரோ பயிர் வைத்திருந்த நிலத்தை எனக்கு கொடுத்துவிட்டார்கள். தாவாவில் சொல்லியுள்ளவாறு வீடு இல்லை என்றும் வீட்டை அகற்றிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் நான் குடிசை வீடு போட்டுள்ளேன்.

3. நான் 1, 2 பிரதிவாதிகளின் நிலத்தில் அமைத்துள்ள மனைப்பிரிவுகளை அச்சுறுத்தவேண்டுமென்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மை சங்கதிகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொதுப்பணித்துறையினருக்கு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வீட்டை இடிக்கக்கூடாது என்று அறிவிப்பு அனுப்பியிருந்தேன் என்றால் சரிதான். வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே எனது வீடு இடிக்கப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், அதன்பேரில் நான் மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்தேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே நான் மனு செய்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 மனு தான் நான் தூசி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு என்றால் சரிதான். மேற்படி புகாரில் 18.08.2022ல் எனது வீட்டை இடிப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கூழமந்தல் கிராமத்தில் பெரிய தெரு எங்குள்ளது என்றால் அந்த கிராமத்தில் தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆதார் அட்டையில் பெரிய தெருவில் வசித்து வந்ததாக தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் அங்கு வசித்து வரவில்லை. நான் அங்கு தான் வசித்து வந்தேன். நான் வாடகை வீட்டில் தான் இருந்து வந்தேன்.

4. குடும்ப அட்டை எப்பொழுது தனியாக வாங்கினேன் என்றால் எனது அம்மா ஊரிலிருந்தது. ஐந்து ஆறு வருடங்களுக்கு முன்பு கூழமந்தல் கிராமத்தில் வாங்கினேன். அதை தான் வா.சா.ஆ.3 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 09.10.2022 தேதியிட்ட வா.சா.ஆ.1 வீட்டு வரி ரசீது மோசடியானது என்றால் சரியல்ல. குடிசை வீட்டிற்கு வீட்டு வரி ரசீது யாரும் வழங்க மாட்டார்கள் என்றால் சரியல்ல. வருவாய் துறையில் எனக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வீடு இடித்ததற்கு மாற்று இடம் கொடுத்துவிட்டார்கள் என்றும், அதன் பிறகு வீடு இடித்து அப்புறப்படுத்திவிட்டார்கள் என்ற விவரத்தை மறைத்து இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காட்டு பகுதியில் எனக்கு வீடு வழங்கியுள்ளார்கள். அங்கு யாரும் வசிக்க முடியாது. வசிக்காத ஒரு இடத்தில் வசிப்பதாக உண்மைக்கு புறம்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் சொத்து விவரம் தவறுதலாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.72/1 என்று சரியாக தான் சொல்லப்பட்டள்ளது. மேற்படி சர்வே எண் அனாதீனம் என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

BALAJI K R

Digitally signed by BALAJI K R
Date: 2026.07.16 11:32:18 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),
செய்யாறு